வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் பணிமனையில் தரைத்தளம் முற்றிலும் சேதமடைந்து, அங்கு வருகின்ற பேருந்துகளைக்கூட நிறுத்தமுடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதை மேம்படுத்தி சீராக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பணிமனை மேம்பாடுகளுக்கும், தொழிலாளர்களின் ஓய்வறை மேம்பாடுகளுக்கும் என 16 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கி அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்கின்ற பணிமனையைச் சீரமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை வழங்குவதற்கு அவர் ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

245—

நவீனமயமாக்குதல்

***41083—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 24]

(அ) ஆத்தூர் தொகுதி, அம்மாபாளையம் ஊராட்சியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையமானது தினசரி ஒரு இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்டதாகும். இதை நவீனப்படுத்த ஒரு கோடியே 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிகிறேன். வணங்கிய கைகள் விலகும் முன்னே வரம் தரும் அன்னையே, வணங்குவோம் உம்மையே என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு பதில் வருவதற்கு முன்னரே ஆத்தூர் தொகுதி, அம்மாபாளையம் பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்த நிதி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையத்தை எந்தவகையில் நவீனப்படுத்தவுள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர், அம்மாபாளையம் பால் குளிரூட்டும் நிலையமானது நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பாலினைக் கையாளும் திறன் கொண்டதாகும். ஆகையால் இதை நவீனப்படுத்த ஒரு கோடியே 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பணியில் புதிய எடைமேடை, புதிய மின்னணு கணினி எடைபோடும் இயந்திரம், தரைத்தளங்கள் செப்பனிடும் பணிகள் மற்றும் கான்கிரீட் நடைபாதை அமைத்தல், புதிய* G.I. Sheet *கூரை அமைத்தல், புதிய* Condenser unit *நிறுவுதல் போன்ற பணிகள் அடங்கும். மேலும், ஆரியம்பாளையம் மற்றும் வெள்ளாளப்பட்டி ஆகிய இடங்களில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட மேலும் இரண்டு தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவும் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பால் உற்பத்தியாளர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

246—

பண்ணைக் குட்டைகள்

*3525 **திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—